540

போதனை விஷய பூங்கொத்து

...தமொருமுறை மலரும்

C. Venkatachalam S. 1941-43.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 DEC 1942
540

Editor & Publi... A. Lourduswami, B.A., L.T.
...Training School, Trichinopoly.

JL
N42.33.6
182303

...5 டிசம்பர் 1942 மலர் 6

...முறை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணா 1½.

போதனா விஷய பூங்கொத்து

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்புகள்	121
2.	"சமுதாயப் பாட்டுகள்"	122
3.	சென்னை கல்வி இலாகா	123
4.	யோசனைக் கணக்கு	123
5.	அணியியல்	124
6.	விஞ்ஞான முறையில் சரித்திரம் போதிப்பதெப்படி ...	125
7.	பாடக் குறிப்பு	127
8.	சிறு கதை	129
9.	இது என்ன? (விடுகவிகள்)	130
10.	யோசனைக் கணக்கு விடை	130
11.	இயற்கைப் பொருட்களின் உதவி	131
12.	விடுகவி விடைகள்	133
13.	மகாராஷ்டிர வீரன் பாஜியின் தியாகம்	134
14.	நீலக் கறுப்பு மை செய்யும் விதம்	138
15.	பொழுது போக்கு	139
16.	நம் பாடசாலை நிகழ்ச்சிகள்	141
17.	பெற்றோர் சங்கங்கள்	142
18.	விகடப்போட்டி	143
19.	கோலாட்டம்	144

Rates of Advertisement

PERIOD	HALF PAGE			FULL PAGE		
	Rs.	As.	Ps.	Rs.	As.	Ps.
1 Month	4	0	0	7	8	0
3 Months	11	0	0	20	0	0
6 Months	20	0	0	35	0	0
1 Year (11 Issues) ...	30	0	0	55	0	0

Imprimatur: ✠ JAMES, *Bishop of Trichinopoly.*

போதனா விஷயப் பூங்கொத்து

கோத்து 33] 15 டிசம்பர் 1942 [மலர் 6

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 DEC 1942
MADRAS

பத்திராதிபர் குறிப்புகள்

நமது பத்திரிகை: சென்ற 32 ஆண்டுகளாக நமது **பூங்கொத்து** ஆசிரியர்களுக்காக அயராது உழைத்து, ஆரம்பக் கல்விக்கு அரும் பெரும் சேவை செய்துவருகிறது. ஆனால் இத்தனை வருஷங்களாக எத்தனையோ நெருக்கடிகளை சமாளித்துக்கொண்டு மாதாமாதம் தனது மணங்கமழும் மலர்களைத் தமிழ் உலகத்தின் ஆரம்பப் பாடசாலைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் உதவி செய்துவந்தது!

ஆனால் தற்கால காகிதப்பஞ்சமோ, இதற்குமுன் இப்பத்திரிகையின் ஆயுசு காலத்திலேயே பார்த்திராதவண்ணம் முற்றியிருக்கிறது. காகித விலை ஒன்றுக்குப் பத்தாக ஏறியிருக்கிறது; அப்படி பதின்மடங்கு விலையைக் கொடுத்துங்கூட தேவையாகிய அளவு காகிதம் கிடைக்கிறதில்லை. இதை உத்தேசித்துப் பத்திரிகையின் சந்தாவை உயர்த்தலாமென்றாலோ, பரிதாபம், ஏழை ஆசிரியர்களின்மேல் அந்த சுமையை வைக்க எமக்கு இஷ்டமில்லை. ஆகவே சந்தாவை உயர்த்தாமலும், பத்திரிகையை நிறுத்தாமலும், நமது **பூங்கொத்தின்** நற்சேவையைத் தமிழ்நாட்டில் வழக்கம்போல் பரப்புவதற்காக கீழ்க்கண்ட சிறிய மாறுதலை ஏற்படுத்தத் தீர்மானித்துள்ளோம்.

வருகிற ஜனவரி மாத முதற்கொண்டு நமது பூங்கோத்து தன் மேல் அட்டையின்றி பிரசுரிக்கப்படும். மற்றப்படி அதன் கட்டுரைகள், பாடக்குறிப்புகள், முதலிய சகல அம்சங்களும் இப்பொழுது இருப்பதுபோலவே நடைபெறும்.

ஆரம்பக்கல்வியின் சேவைக்காக அயராமல் உழைத்துவரும் நம் ‘பூங்கொத்தை’ சந்தாதார்களும், இன்னும் ஆசிரியர் எல்லோரும் அன்புடன் ஆதரிப்பார்களாக. விஷயதானம் செய்வதிலும், சந்தாவைப் பாக்கியில்லாமல் புதுப்பித்துக்கொள்வதிலும், இன்னும் அநேக சந்தாதார்களைச் சேர்த்தும் உதவி செய்வார்களாக.

“ சமுதாயப் பாட்டுகள் ”

ஏற்றப்பாட்டு

மாதாவே தாயேயுன் மலர்ப்பாதம் போற்றி
வயல்நிறையத் தண்ணீரை யானிரைப்பனேற்றில்
ஆதாரமான பயிர்கள் செழித்தோங்க
அமலனருளெங்கள் மத்தினிடைத் தேங்க
சேதாரமின்றிப் பயிர்களிடைக் காணும்
செழுங்கதிர்க ளத்தனையும் விளைந்திடவேவேணும்
சூதானமா அறுத்தடிக்க அம்மே
சொல்லிடுவாய் நல்ல துதி சோதிவிரியும்மே.

மழைப்பாட்டு

மாலைவானஞ் சிவக்குதடி யிது மழைக்குநற்குறியாகுதடி
ஆலயத்திற் புகுவோமடி நமதாண்டவரைப்பாடி மகிழ்வோமடி
எட்டுத்திக்குங்குமுறுதடி மேகமிருண்டு திரண்டு வருகுதடி
கட்டுக்கடங்கா மழைபொழிய நற்காலமின்றிதோ தோற்றுதடி
தட்டான் தாழப் பறக்குதடி [illegible]பர்தானே பொங்கி வழியுதடி
திட்டமான மழை பொழியுமிது தேர்ந்தநற்குறியாகுதடி

182303
00 008

சென்னை கல்வி இலாகா

Proceedings of the Director of Public Instruction, Madras. C. No. 3580-B/42. Dated 17-10-42.

கல்வி டைரெக்டரது C. No. 6004-B/39 dated 15-12-39 உத்தரவின்படி, 1939-ம் ௵ டிசம்பர்-௴ 15-ம் தேதிக்குப்பிறகு பிரத்தியேகமாய் பெண் பாடசாலைகள் இல்லாத இடத்தில் ஆண் பாடசாலையைப் புதிதாக ஏற்படுத்தவும், அதற்கு அங்கீகாரமும் கோரினால், அப்பள்ளிக்கூடத்தில் படிக்கும் ஆண் பிள்ளைகளின் தொகையில் பாதிப்பேராவது பெண்கள் சேர்ந்து படிக்கவேண்டும். இல்லாவிடில் அங்கீகாரம் கிடையாது. இதுவே உத்தரவு.

ஆனால் 1939-ம் வருடத்திற்கு அடுத்த பிரதி வருஷத்திலும் மேற்கண்டபடி அந்த ஆண்பாடசாலையில் படிக்கும் ஆண்பிள்ளைகளில் பாதிப்பேர்வீதம் பெண்கள் படித்துவந்தால் போதுமா? அல்லது அந்த இடத்தில் படிக்க வயதுவந்துள்ள, லாயக்குள்ள பெண்களில் 25 சதவிகிதப்படி பெண்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமா? என்ற பிரச்னை கிளம்பியிருக்கிறது.

இதுவிஷயமாய் டைரெக்டர் தெரிவிப்பது யாதெனில், ஆண்பிள்ளைகளின் தொகையில் பாதிப்பேர் பெண்கள் சேர்ந்து படித்தால் போதாது. அப்பிரதேசத்தில் படிக்க வயதுவந்துள்ள (School age) பெண்களில் 25%க்குக் குறையாமல் வரும் வருடத்தில் ஷை பள்ளிக்கூடத்தில் சேர்த்துக்கொண்டால்தான் அங்கீகாரம் நிலைநிற்கும் என்பதே.

யோசனைக் கணக்கு

ஒரு கடிகாரம் தவறி விழுந்ததில் 3 துண்டுகளாகப் போய் விட்டது. ஒவ்வொரு துண்டிலுள்ள நம்பரைக் கூட்டினால் 26 வருகிறதென்றால் அக்கடிகாரம் எங்ஙனம் உடைந்ததென்று கூறவும்.

(S. Darmanathan, St. Mary's Boys' School, Cantt., Trichy.)

அணியியல்

இல்பொருள் உவமையணி

உலகத்தில் இல்லாத ஒரு பொருள் இருப்பதாக உட்கொண்டு அப்பொருளை உவமையாகக் கூறுவதே இல் பொருள் உவமையணியாகும்.

(உ-ம்) " எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகும்—உய்த்துணர்ந்துஞ்
சொல்வன்மை யின்றெனி னென்னாகுமஃதுண்டேற்
பொன்மலர் நாற்றமுடைத்து."

இச் செய்யுளுட் பொன்மலர் நாற்றம் உடைத்தாயினாற் போலும் என்பது உவமை. பொன்மலர்க்கு நாற்றமின் றென்பது வெளிப்படை. இயல்பிலேயே மணமற்ற பொருளுக்கு மணமுண்டாயினாற் போலும் என இல்லாத பொருளை உவமை கூறியிருத்தல் காண்க. பிறவு மன்ன.

ஐயவணி

இரண்டு பொருட்களுக் குளாவாகிய ஒப்புமைகாரணமாக ஒரு பொருளைக் கண்டு அதுவோ மற்றொன்றோ? என்று ஐயுற்று ஒன்றினும் உறுதி தோன்றாதிருப்பதே 'ஐயவணி' என்னும் அலங்காரமாகும். (உ-ம்)

" நீனிற முகிலோ பசியசைவலமோ நெடுந்திரை
கொழித்ததெள் ளறலோ
பானலங் கொண்ட பணிமொழித் துவர்வாய்ப்
பைந்தொடி கரியமென் கூந்தல்."

இந்நைடதச் செய்யுளடிகளுள் தமையந்தியின் கூந்தல், நீருண்டு கருத்த மேகமோ? கொடிப் பாசியோ? நெடிய அலைகளால் ஒதுக்கப்பட்ட கருமணலோ இந் நிலையுடைய தென்று துணிவு தோன்றா நிலையுடையதாயிருந்தது என்பது பிறவுமிவ்வாறு காண்க.

M. A. S. Udaiyar

விஞ்ஞானமுறையில் சரித்திரம் போதிப்பதெப்படி?

கல்வி வாரம் எங்களூரில் கொண்டாடப்பட்டது. அதற்காக மாலையில் ஒரு சொற்பொழிவும் நிகழவிருந்தது. நான் அங்கு போயிருந்தேன். அப்பொழுது இரண்டு நண்பர்கள் பேசிக்கொண்டிருப்பது காதில் விழுந்தது. "அந்தப் பள்ளிக்கூடத்து சரித்திர ஆசிரியர் இன்று பேசுகிறார்; ஏதாவது கதையளப்பார் கேட்கலாமென்று வந்தேன் என்று ஒருவர் மற்றொருவரிடம் தான் வந்ததற்குக் காரணத்தை விளக்கிக்கொண்டிருந்தார். "கதையளப்பார்" என்று அவர் சொன்னது என் சிந்தனையைத் தூண்டியது. அவர் கூறிய இந்த அவதூறானது அந்த ஆசிரியரை மட்டும் சாராது. சரித்திரத்தையே பாதிக்கக்கூடியது.

சரித்திரம் என்றால் ஏதோ கதை, ஓரளவு உண்மையிருக்கலாம், ஆனால் முற்றும் நம்புவது தவறு என்ற எண்ணம் பெரும் பான்மையான மக்களிடம் பரவிகிறகின்றது. இந்த தப்பபிப்பிராயத்தைத் தவிர்க்கவேண்டியதவசியம். எப்படிச் செய்ய வேண்டுமென்றால் சரித்திரம் மற்ற சாஸ்திரங்களைப்போல் ஆராய்ச்சி செய்யப்பட்ட உண்மையென்பதைப் பலரும் முக்கியமாக, ஆரம்பக்கல்வியுடன் படிப்பதைக்கைவிடும் பெரும்பான்மையான ஜனங்கள் உணரும்படிச் செய்யவேண்டும்.

சரித்திரத்தை ஏன் சாஸ்திரம் என்று கூறுகிறோம் என்பதைச் சிறிது ஆராய்வோம். ஆராய்ச்சி செய்யப்பட்டு கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகளையும் விதிகளையுமே சாஸ்திரமெனக் கொள்கிறோம். (Science is investigated truth). சரித்திரமானது கற்பனையின் மூலம் வெளியான கதையல்ல. பலதிறப்பட்ட மூலாதாரங்களைப் பரிசீலனைசெய்து பலர் கூடி ஆலோசித்துக்கண்டுபிடிக்கப்பட்ட உண்மையாகும். "கல்லும் சொல்லாதோ கவிதை" என்பர். கல் கவிதை மாத்திரம் சொல்லவில்லை. சரித்திர காலத்தைத் தெட்டன எடுத்துக்காட்டுகின்றது. இலக்கியங்களும், சாஸனங்களும், நாணயங்களும், கட்டிடங்களும் சரித்திரத்தை நிர்ணயிப்பதில் பங்கு எடுத்துக்கொள்கின்றன. ஒரு சரித்திர சம்பவத்தைத் தீர்மானமாக முடிவுசெய்யுமுன் பல ஆதாரங்களைக்கொண்டு பரிசீலனை செய்யவேண்டும். இவ்வகைக் கைங்கர்யத்தை பல அறிஞர்கள் செய்து வருகின்றனர். வான சாஸ்திரி ஆகாயத்தைப் பெரிய பூதக்கண்ணாடிகள்மூலம் கண்

னுற்று பல நாட்கள் உற்றுநோக்கிச் சில புதிய கொள்கைகளை உலகிற்குத் தெரிவிக்கிறார். அதேபோல் சரித்திர ஆராயச்சியாளர்களும் பூமியைக்குடைந்து பல நாகரீகச்சின்னங்களை கண்டெடுத்து காலப்போக்கை நிர்ணயிக்கின்றார்கள் அல்லவா?

இவ்விதம் சரித்திரம் ஆராய்ச்சி செய்யப்பட்டு கண்டுபிடிக்கப்பட்ட உண்மை என்பதைச் சிறிதளவாவது அறிவுறுத்துவதற்கு ஆரம்பப் பாடசாலையில் எவ்வித முயற்சிகள் எடுக்கக்கூடும் என்பதைப் பார்ப்போம்.

1. சரித்திரம் போதிக்கும் பொழுது அடுத்துள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்தலத்திற்கு மாணவரைக் கூட்டிச் சென்று அந்தஸ்தலத்தின் வரலாற்றையும் அங்கு நடந்த சரித்திரசம்பவத்தையும் விளக்கினால் மாணவர் ஒருவாறு சரித்திரம் உண்மை என்று உணர ஏதுவாகிறது.

2. சரித்திரத்திற்கு ஆதாரமான இலக்கியங்கள் பலவுள. அவைகளில் சிலவற்றைத் தக்க சமயங்களில் வகுப்புகளில் கையாளலாம். நாட்டுப் பாடல்களும், கதைகளும், சரித்திரத்திற்குச் சான்றாக விளங்குகின்றன. இவ்விதம் மற்ற நூல்களைக் கையாளும் பொழுது சரித்திரத்திற்கு ஆதாரமானவற்றையே தேர்ந்தெடுக்கவேண்டும்.

3. சரித்திரப் பிரசித்தி பெற்ற கட்டிடங்கள் சின்னங்கள் முதலியவற்றின் புகைப்படங்களை உபயோகிப்பது நலம்.

4. சில சாஸனங்கள் கல்வெட்டுக்கள் முதலியவற்றைப் பார்த்து அட்டைகளில் அவைகளின் பிரதிகளைத் தயார்செய்ய வேண்டும். அட்டையின் மறுபக்கத்தில் அதன் அர்த்தம் தெளிவாக எழுதப்படவேண்டும். இவைகளை வகுப்புகளில் உபயோகித்து சரித்திர உண்மையை வற்புறுத்தலாம்.

ஆரம்ப வகுப்புகளுக்கேற்ற மூலாதாரங்களைக் கொண்டு தொகுத்த புஸ்தகங்கள் இங்கிலாந்திலும் மற்ற மேல் நாடுகளிலும் அதிகமாகக் காணப்படுகின்றன. நம் நாட்டிலும் அத்தகைய புத்தகங்கள் வெளிவந்தால் சரித்திர போதனை பெரிதும் பயன் பெறும்.

பாடக் குறிப்பு

பாடம் :— அரசியல் (Civics). வகுப்பு V.

நோக்கம் :— மாணவர்களுக்கு கிராமப் பஞ்சாயத்து சபையின் வேலைகளைப்பற்றிப் போதித்தல்.

பீடிகை :— கிராம அரசாட்சி—கிராம முனிஸீப்பின் வேலை—இதைப்பற்றி ப்ரஸ்திபித்துப் பிறகு கிராம அரசாட்சிக்குத் துணையாக விருக்கும் ஒரு ஸ்தாபனம் உண்டெனக் கூறவும்.

விஷயம் :—1. ஏற்படுத்தியதின் நோக்கம் : கிராம முன்னேற்றம்—கிராம வாசிகள் சுகவாழ்வு வாழ்வதற்கு வேண்டிய வசதிகளை அளித்தல்.

2. பஞ்சாயத்துகளின் அமைப்பு. அங்கத்தினர்கள் 8 முதல் 16 பேர்—கிராமத்தின் பல பகுதிகளிலிருந்தும், பல வகுப்பிலிருந்தும் (ஜாதி) ஓட்டுரிமைபெற்ற அந்தந்த கிராம வாசிகளால் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்தல்—அங்கத்தினர்களுக்குள் தலைவர் தேர்ந்தெடுத்தல்—மூன்று வருஷகாலம் பதவியில் இருத்தல்—கௌரவத்திற்காக உத்தியோகம் செய்தல்.

3. பஞ்சாயத்து சபைகளின் வருமானம் :

i. நிலவரியில் ரூபாய்க்கு 6 பைசா அரசாங்கத்தாரால் அளிக்கப்படுதல்.

ii. பாசிக் குத்தகைப்பணம், சந்தை வரிப்பணம், லைசென்ஸ் வரிப்பணம், முதலிய வரும்படிகள்.

iii. அரசாங்கத்தாரின் உத்தரவின்பேரில் இன்னும் இதர வரிகள்—பந்தல்வரி, தண்ணீர்வரி, முதலியவைகளையும் விதிக்கலாம்.

4. சபைகள் கவனிக்கவேண்டிய காரியங்கள் :

i. சுகாதாரத்திற்கான காரியங்கள் : குளம், கிணறு வெட்டுதலும், புதிப்பித்தலும், பாதுகாத்தலும்—தெருக்களைச் சுத்தஞ் செய்தலும்—கொசுக்கள் பரவுவதற்கான வசதிகளை அழித்தல்—தீபஸ்தம்பங்களை நட்டு இராக்காலங்களில் வெளிச்சம்போடுதல் முதலியன.

ii. கெட்ட வியாதிகள்: தொத்து வியாதிகள் உள்ள இடங்களைப் பரிசோதித்து, நச்சுப் போக்கிகளை உபயோகித்தல்—நோயுள்ள பிள்ளைகளைப் பள்ளிக்கூடம் போகாமல் தடுத்தல்—சுடுகாடுகள், பிணங்களை புதைக்குமிடங்களை பார்வையிடல்—நாய்களையும், பன்றிகளையும் தெருவில் சுற்றித்திரிந்தால் கொல்லுதலும்.

iii. சாலைகள்: புதிய சாலைகளை அமைத்தலும் புதிப்பித்தலும்—சாலைகள் இருபுறங்களிலும், நிழலைத்தரும் மரங்களை வைத்து வளர்த்தல்.

iv. கிராம நீர் பாசன வசதிகள்: மதகுகள் கட்டல், பாலங்கள் அமைத்தல்—வாய்க்கால்கள், வடிகால்கள் வெட்டுதல் முதலியன.

5. முறை:—**சபைகளின் கூட்டங்களின் நிர்வாகம்:**—மூன்று தினங்களுக்கு முன்னதாகக் கூட்டம்கூடும் நாள் அறிவிக்கப்படும்—அங்கத்தினர்கள் தீர்மானத்தை தலைவர் அங்கீகரித்தல்.

ஆசிரியர் மேற்சொல்லப்பட்ட விஷயங்களை மாணவர்கள் எளிதில் கண்டுபிடிக்கக்கூடிய விதத்தில் தெளிவாயும், விவரித்தும், ஒவ்வொரு பகுதியின் தலை அங்கத்தையும், உபதலை அங்கங்களையும் க. ப. ல் எழுதியும், மாணவர்களுக்கு தெரிந்த விஷயங்களை அவர்களிடமிருந்து வினாக்கள் மூலமாய் வரவழைத்தும் போதித்தல் வேண்டும். பிள்ளைகளைக்கொண்டே தேர்தல் நடத்தியும், நடவடிக்கைகளை நடிக்கச்செய்தும், சம்பாஷணை ரூபமாய் போதிக்கலாம்.

பரீட்சை:—கீழக்கண்ட வினாக்களால் மாணவர்கள் அறிந்த விஷயங்களை ஸ்திரப்படுத்தலாம்.

கிராம பஞ்சாயத்து சபைகளை நம் அரசாங்கத்தார் ஏற்படுத்தியதின் நோக்கம் என்ன? அங்கத்தினர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள்? தேர்ந்தெடுப்பதற்கு உரிமையுள்ளவர்கள் யார்? இச்சபைக்கு எந்தெந்த விதங்களிலிருந்து வருமானம் கிடைக்கின்றது? இச்சபை கிராம வாசிகளுக்கு செய்துவரும் காரியங்கள் என்ன? சபைக்கூட்டங்கள் எவ்வாறு நிர்வகிக்கப் படுகின்றன? ஆதலால் இச்சபைகள் மட்டில் நமக்குண்டான கடமை என்ன?

சிறு கதை

யானையின் வெற்றி

(M. Belevendram)

காட்டில் வாழும் மிருகங்களில் எல்லாம் பெரியது யானை. எந்த மிருகத்திற்கும் இல்லாத அவயவம் ஒன்று யானைக்கு உள்ளது. அதற்குப் பெயர்தான் தும்பிக்கை. அதன் தும்பிக்கை உண்ணுவதற்கும் எதிரிகளிடமிருந்து தப்பித்துக்கொள்ளவும் அதற்கு உதவுகிறது.

இந்த அவயவம் யானைக்கு எப்படி வந்தது? வெகு காலத்திற்குமுன் இது தும்பிக்கை இல்லாமல் அதிகக் கஷ்டப்பட்டது. மற்ற மிருகங்கள் இதன் மேல்ஏறி விளையாடியும், அடித்துக் கஷ்டப்படுத்திக்கொண்டும் வந்தன. இன்னும் யானை தன் முழங்கால்களை மடக்கிக்கொண்டு உணவை உண்ணும். அப்போது மற்ற மிருகங்கள் 'டே பல்லா, முழங்காலிலிருந்து கொண்டு உணவைக் கௌவிக்கௌவிச் சாப்பிடுகிறாயே என்று கேலி செய்யும். இவற்றையெல்லாம் யானை பொறுமையோடு சகித்துக்கொண்டு, தனக்கு ஏதாவது ஒரு உதவி செய்யுமாறு கடவுளை நோக்கிப் பிரார்த்தித்துக்கொண்டு வந்தது.

இப்படி வெகு நாட்கள் சென்றன. ஓர் நாள் யானை காட்டில் ஓர் ஆலமரத்தடியில் உட்கார்ந்து தான் படும் சகிக்க முடியாத கஷ்டங்களைப்பற்றி நினைத்து, வருந்தி, பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தது. அந்தோ பரிதாபம்! அச்சமயத்தில் பசியிருந்த ஒரு புலி அங்கே வந்தது. யானையைக் கண்டவுடன் அது சந்தோஷித்து 'ஆ! இன்று ஒரு கொழுத்தவேட்டை. நான் நரி முகத்தில் விழித்திருக்கவேண்டும்' எனச் சொல்லிக் கொண்டே அந்த யானையின்மீது அதிக ஆத்திரத்துடன் பாய்ந்தது.

யானையும் புலியைக் கண்டவுடன் அஞ்சிற்று. அன்றோடு தனக்கு வாழ்நாள் முடிந்ததாக எண்ணிற்று. அதனுடைய சரீரமெல்லாம் வெடவெடவென நடுங்கியது. இந்த நிர்ப்பாக்கிய நிலைமையில் புலி தன்மேல் கோபாவேசத்துடன் பாய்வதைக் கண்டு யானை தன்னுடைய கொழுத்த காலைத்தூக்கி சற்று ஒதுங்க முயற்சி செய்தது.

ஆனல் பாவம். நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கிறது. வேகத்துடன் பாய்ந்த புலி யானையின் அசைவால் அதன் காலின் இடையில் அகப்பட்டுக்கொண்டது. உடனே யானை தன் தந்தத்தால் அதைக் குத்தி இழுத்தது. இழுக்க புலியின் குரல்வளையோடு சேர்ந்து அன்னக் குழலும் உருவிக் கொண்டு வந்தது. இந்த நீண்ட குழல் யானையின் வாய்க்குச் சற்று மேலேயும் இரு தந்தங்களுக்கு நடுவிலும் மாட்டிக்கொண்டது. என்ன முயற்சி செய்தும் யானையால் அதை எடுக்க முடியவில்லை; எனவே முன்னிலும் அதிக வருத்தமடைந்தது. ஆனல் அந்தக் குழல் நாளடைவில் அதன் தலையோடு ஒட்டிக் கொண்டது. பிறகு பழகிப் பழகி அதைத் தன் தும்பிக்கையாக வைத்துக்கொண்டது. ஆகையால்தான் இப்போதுகூட அத் தும்பிக்கையில் துவாரமிருக்கிறது.

பிறகு அந்த யானை அளவுகடந்த சந்தோஷமடைந்தது. என்றாலும் கடவுளை அது மறக்கவில்லை. அவருக்கு நன்றி கூறிற்று. பின் தன்னைப் பரிகாசம் செய்தவர்களை எல்லாம் தண்டித்தது.

இது என்ன?
(விடுகவிகள்)

1. முழு முழு முள்ளுக்குள்ளே, முந்திரி தோப்புக்குள்ளே, வைக்கோல் பரப்புக்குள்ளே, மாணிக்கம் கண்டெடுத்தேன்.

2. செங்கால் நண்டு வட்டத்தோப்பு, பட்டணத்தைச் சுற்றி பெட்டிக்குள் அடைந்தது.

P. Raphael.

3. கிள்ளலாம், கிழிக்கலாம், கிளிக்கூட்டில் அடைக்கலாம், இரத்தம்வரக் கிள்ளலாம், வெளியில் பிடித்துத் தள்ளலாம்.

S. Arpudasamy.

யோசனைக்கணக்கு விடை

(கொத்து 33, மலர் 5, பக்கம் 118.)

விடை:—ஆண்: 10 பேர்; பெண்: 10 பேர்; சிறுவர் 80 பேர். இவ்விடையளித்தவர்கள்:—

1. P. Raphael. 2. S. Arpudasamy. 3. Thathan.

இயற்கைப் பொருட்களின் உதவி

இயற்கைப் பொருள்களிற் சிறந்து காணப்படுவன மண், நீர், தீ, காற்று, வானம் ஆகிய ஐந்துமாம். இவ்வைந்தின் கூறுகவே எல்லாப் பொருட்களுமமைந்திருக்கின்றன. இவ்வைந்தும் அளவோடிருந்தால்தான் உலகம் நிலேத்து நிற்கும். ஒன்றை ஒன்று மீறினல் உலகத்திற்கே அழிவு உண்டாகிவிடும். நமதுடலினும், இவ்வைந்துமுள்ளன. நமக்கும் சூடு அதிகப்பட்டாலும், குளிர்ச்சி மிகுந்தாலும், காற்று நிறைந்தாலும், உடல் பருத்தாலும் துன்பம்நேருவதைக் காணுகின்ருேம்.

உலகில் மழைபெய்யாது வெப்பம் மிகுந்துவிட்டால் உயிர்களுக்குவேண்டிய உணவுப்பொருட்கள் விளேயாமல் வறுமை மேலிடுவதைப் பார்க்கின்ருேம். அன்றி, மழை மிகுதியாகப் பெய்தாலும் வெள்ளம் பெருகிப் பயிர்வகைகளுக்கும், மக்களுக்கும், நாடுநகரங்களுக்கும், பெருத்த இடையூறு நேருவதைக் காண்கின்ருேம். காற்று மிகுந்து வீசுவதினுல் மரஞ்செடி கொடிகள் வீழ்வதையும், வீடுகள் சிதைவதையும், இன்னும் பெருத்த சேதங்களுண்டாவதையும் அறிகின்ருேம். எல்லா உயிர்களும் வாழ்வதற்கு இடமாக இருப்பன பூமியும், வான வெளியுமாகும். வானவெளியின்றேல் மற்றைய நான்கு பொருள்களுங்கூட நிலேத்துநிற்க வியலாது.

சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் முதலிய பொருட்களும் நமக்கு உதவி செய்வனவே. அவைகள் வானத்தில் உள்ள பொருட்கள். சூரியவெளிச்சத்திற்படாத எந்த உயிர்களும், நோயற்றவாழ்வு வாழமுடியாது. சூரியவெளிச்சம் மக்களுக்கும், மரம் செடி கொடிகளுக்கும், மற்றைய உயிர்க் கூட்டங்களுக்கும் வளர்ச்சியைக் கொடுக்கின்றது. சந்திரனுலும், பெருத்த இன்பமும் நலமும் அடைகின்ருேம். நட்சத்திரங்களும் அவ்வாறே நன்மையைச் செய்கின்றன. சூரிய சந்திரர்களால் உலகிற்குண்டாகும் எண்ணிறந்த நன்மைகளேயறிந்தே உலகத்து மக்களிற் பெரும்பாலோர் அவைகளேக் கடவுளாகக்கொண்டு வணங்குகின்றனர்.

இனி மரம் செடி கொடிகளேப் பற்றிச் சிறிது நோக்குவோம். சிலர் பலப் பல பெரிய மரங்களும் பலவகையான செடிகளும், கொடிகளும், இருப்பதனுற் பயன்படாதென்று நினேக்கலாம்.

182363

அவ்வாறு நினைப்பது தவறு. மக்கள் நோயின்றி வாழ்வதற்கு அவையே முதன்மையாக இருக்கின்றன. காற்றின்றேல் யாவரும் உயிர்வாழவொண்ணாது. மக்களுக்கு நல்ல காற்றை நிலையியற் பொருள்களே தருகின்றன. மக்கள் மூச்சுவிடும் நச்சுக் காற்றை அவைகள் உட்கொண்டு அவைகள் தம்பா லிருந்து நற்காற்றை மக்களுக்களிக்கின்றன. மற்றும் மக்களுக்கு வேண்டிய உணவுப்பொருட்களையும், அவைகள் உதவுகின்றன. வாழை, மா, பலா, தென்னை முதலிய மரங்களைப்பாருங்கள். இவைகள் மக்கள் வாழ்க்கைக்கு எவ்வளவு இன்றியமையாதனவா யிருக்கின்றன! பூசணி, அவரை, புடலை, பீர்க்கு முதலிய கொடி வகைகளை நோக்குங்கள்! இவைகள் தரும் காய்கள் உணவாகப் பயன்படுகின்றனவன்றோ? இன்னும் பலன் தராத மரவகை களும், மக்களுக்குப் பயன்படும் பல பொருள் ஆக்குவதற்குப் பயன்படுகின்றன.

இயற்கைப் பொருட்கள் மக்களுக்கு உதவிபுரிவதோடன்றி, மற்றைய விலங்கு பறவை முதலிய உயிர்வகைகளுக்கும் உதவி செய்கின்றன. விலங்குகளிற் பல, உயிர்களைக் கொன்றுண்ணும் மக்களைப் போலில்லாமல், இயற்கையாக வளரும் புற் பூண்டு களையும், இலைகளையுங், கொடிகளையுந் தின்று உயிர் வாழ்கின்றன. நாட்டு விலங்குகளாகிய ஆடு, மாடு முதலியவைகள் உண்பவை எல்லாம் மரக்கறி வகைகளன்றோ? அவைகள் மர உணவுகளை யுண்டு நமக்கும் இனிய பாலைத் தருகின்றன. பறவைகளிற் பல புலால் புசியாது மரங்களின் பழவகைகளையும், கொட்டைகளை யும் உண்டு உயிர் வாழ்கின்றன.

தேனீயைப் பாருங்கள். அவைகளுக்கு மலர்களே உண வைத் தருகின்றன. தேனீக்கள் மலர்களில் அமைந்துள்ள தேனை உண்டு மகிழ்ந்து, இனிய இசை பாடிக்கொண்டிருப்பதைப் பூந்தோட்டங்களிற் சென்றால் கண்டுகளிக்கலாம். மலர்களாகிய இயற்கைப் பொருட்களிலிருந்து பல மருந்து வகைகளும், வாசனை எண்ணெய் வகைகளும் செய்கின்றார்கள். மலர்களையும், அவற்றின் நல்ல மணத்தைக் கருதி மக்களனைவருஞ் சூடி மகிழ் கின்றனர்.

பூமியிலுள்ள இயற்கைப் பொருட்களேயன்றி நீரிலுள்ள இயற்கைப் பொருட்களும் உதவிசெய்யும் குணமுடையனவா யிருக்கின்றன. நீரில், பாசி, அல்லி, தாமரை முதலியன காணப்

படுகின்றன. இன்னும் தவளை, மீன், ஆமை, நண்டு, நத்தை முதலிய பல பொருள்களுமிருக்கின்றன. அவைகள் ஒன்றற்கொன்று உதவிபுரிந்துகொள்ளுகின்றன. மீன் முதலிய உயிர்கள் விடும் மூச்சுக் காற்றைத் தாமரை முதலிய கொடிவகைகள் இழுத்துக்கொண்டு, அவைகளுக்குத் தமது வழியாக நல்லகாற்றைக் கொடுக்கின்றன. உயிர்ப் பொருட்கள் மிகுதியாக வாழ்கின்ற தண்ணீரே மக்கள் கையாள்வதற்குரிய நல்ல தண்ணீராகும். அத்தண்ணீரில் உள்ள அழுக்குவகைகளை அதிலுள்ள உயிர்கள் உண்டு நீரைத் தூயதாக்குகின்றன.

ஒவ்வொரு இயற்கைப் பொருள்களிடத்திலும் பல அரிய தன்மைகளுள்ளன. அவைகளை முழுவதும் அறியவேண்டுமாயின் இயற்கைப் பொருள்களைக் காணுந்தோறும், அவைகளை உற்று நோக்குவோமாயின் அறிந்துகொள்ளலாம். அப்பொழுது நம் மனதில் வியப்பும், கடவுளின் போற்றலும் இனிது விளங்கும். ஆகவே கடவுள் மக்களையும், விலங்குகளையும், பறவைகளையும், மரங்களையும், செடிகளையும், கொடிகளையும், மற்றுமுள்ள பொருள்களையும், ஒன்றற்கொன்று உதவிசெய்துகொண்டு வாழும் முறையிலேயே படைத்திருக்கின்ருர் என்பதை நாம் மனதில் வகிக்கவேண்டும்.

விடுகவி விடைகள்

(கொத்து 33, மலர் 5, பக்கம் 104.)

விடைகள் :—1. எருக்கம் பூ, இலை, காய். 2. மீன். 3. வெற்றிலை, பாக்கு, சுண்ணும்பு. 4. முத்துச்சோளக் கதிர். 5. நண்டுபிடித்தல். 6. மாவு அரைக்கும் திருகை இயந்திரம்.

ஷ விடையளித்தவர்கள் :—1. P. Raphael, H. M. Vadugapalayam. 2. S. Arpudasamy, R. C. School, Sempet. 3. M. Palaniandi. 4. Thathan. 5. M. Doraisamy.

மகாராஷ்டிர வீரன் பாஜியின் தியாகம்

ஒரு சிறு நாடகம்

(T. Alangaram)

(பனக்கலக் கோட்டையை விஜயபுரி வீரர்கள் முற்றுகை யிட்டுக் கொண்டிருக்கின்றனர். சிவாஜியின் வீரர்களுக்கும், விஜயபுரி சுல்தானது வீரர்களுக்கும் பெரும் போர் நடக்கிறது. இச்சந்தர்ப்பத்தில்தான் கீழே வரும் செய்தி நடைபெறுகிறது).

காட்சி 1.

இடம்: பனக்கலக் கோட்டையினுள் தனி அறை. **காலம்:** இரவு.

பாத்திரங்கள்: சிவாஜி

(பனக்கலக் கோட்டைக்குள் சிவாஜி தன் அறையில் அங்கும் இங்கும் உலாவிக்கொண்டிருக்கிறான்.)

சிவாஜி: (தனக்குள்ளே) என்னிடம் தற்பொழுது சொற்ப வீரர்களே இருக்கின்றனர். இவர்களின் உதவியைக்கொண்டு நான் எவ்விதம் முகலாய வீரர்களைத் தாக்குவது. குளிர்காலம் நெருங்கியதும் போர் நின்று விடும் என்று எண்ணியிருந்தேனே, குளிர்காலமும் வந்துவிட்டதே, போர் நிற்பதாகத் தெரிய வில்லையே. இதனால் வெளியிலிருந்து உணவு வருவதும் கடினமா யிருக்கின்றதே. விஜயபுரி சுல்தானோ, மேன்மேலும் உதவிப் படையை முகலாய வீரர்களுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறான். வெளியிலிருந்து உதவிக்காக வீரர்களைக் கொண்டுவருவது சுலப மான காரியமல்ல. ஒவ்வொரு நிமிடமும் ஆபத்து என்னை அணுகிக்கொண்டே யிருக்கிறது. நான் இச்சமயம் சுவற்றில் இருக்கும் பூனையின் நிலைமையை ஒத்திருக்கிறேன். அம்மை பவானியின் அருள் இருந்தால் எல்லாம் மங்களமாக முடியும். (சில விநாடிகள் யோசித்தல் திடீரென்று) ஆம் அதுவே சரியான யோசனை. அப்படியே செய்யவேண்டும். (திரை விழுதல்)

காட்சி 2.

இடம்: முகலாயரின் பாளையம். **காலம்:** நடு இரவு.

பாத்திரங்கள்: சிவாஜி; முகலாய படைத் தலைவன் சித்தி ஜோஹர். (எங்கும் ஒரே இருள். சில முகலாய வீரர்கள், குடி வெறியினால், வாயில் வந்தவாறு உளறிக்கொண்டும், ஆடிக்

கொண்டும் இருக்கின்றனர். ஓர் கூடாரத்தில் முகலாய வீரர்களின் தலைவன் சில வீரர்களுடன் இரகசியமாய் பேசிக்கொண்டிருத்தல்—வாயலில் ஓர் வீரன் காவல் செய்கிறான். சிவாஜி வரல்.)

வீரன் : (சிவாஜியை நோக்கி) யாரது.

சிவாஜி : நான் ஒரு போர் வீரன். உங்கள் தலைவனைக்காண வேண்டும்.

வீரன் : சரி. நில்லுங்கள், நான் போய் அழைத்துவருகின்றேன். (போதல். தலைவனை அழைத்து வரல்).

தலைவன் : (ஆச்சரியத்தோடு) ஆ! சிவாஜி மன்னனா, வாருங்கள், (சிவாஜியை உள்ளே அழைத்துச் செல்லுகிறான். உடனே சீன் தூக்கப்படல் சிவாஜிக்கு ஆசனமளித்தல். சிவாஜியும் உட்காரல்).

தலைவன் : (சிவாஜியை நோக்கி) மன்னரே தாங்கள் இந்த நடு நிசியில் என்னை நாடிவந்ததின் காரணத்தையறியலாமோ.

சிவாஜி : வீரர் தலைவ! உனது வெற்றிப்பிரதாபத்தை சென்ற சில நாட்களாக நடந்த போரில் கண்டது முதல் என் மனம் உன்னைக் காணவேண்டுமென்ற ஆவலினால் என்னை இங்கு அழைத்துவந்தது. தவிர என்னிடம் அதிகம் வீரர்கள் இல்லை. இருந்தவர்களில் பலர் போரில் மாண்டு போயினர். இனி என்னால் உங்களை எதிர்த்துப் போர்புரிவதற்குச் சக்தியில்லை. ஆகையால் நான், இன்றுமுதல், ஒரு சிற்றரசனைப்போலக் கப்பங்கட்டிக் கொண்டு வாழுவதாக உறுதி செய்துகொண்டிருக்கிறேன்.

தலைவன் : (திகைத்தல்) வீரராகிய நீங்களா இவ்விதம் செய்யத் துணிந்துவிட்டீர்.

சிவாஜி : ஆம். நான் சென்று வருகிறேன். வந்து வெகு நேரமாகி விட்டது. மற்ற விஷயங்களை நாளை உன்னிடம் வந்து தெரிவிக்கிறேன். (விடைபெற்றுக்கொண்டு செல்லல்). திரை விழல்.

காட்சி 3.

காலம் : இரவு.

பாத்திரங்கள் : சிவாஜியும் அவருடைய போர் வீரரும்.

இடம் : பனக்கலக் கோட்டை.

(கோட்டைக்குட்புறம் மகாராஷ்டிர வீரர்கள் கூடியிருக்கின்றனர். அவர்களின் மத்தியில் சிவாஜி நிற்றல்).

சிவாஜி: வீரர்களே! நம் எதிரிகள் என் தந்திரத்தை அறிந்துகொள்ளாமல் தாங்கள் வெற்றியடைந்து விட்டதாக நினைத்துக்கொண்டு கவலையின்றி ஆழ்ந்த நித்திரையிலிருக்கின்றனர். இதுவே நாம் தப்பிச்செல்வதற்குச் சுலபமான தருணம். விடியுமுன் நாம் விசாலக்கட்டத்திற்குச் சென்றுவிடவேண்டும். அங்கே சென்றுவிட்டால் எதிரிகள் ஒன்றும் செய்யமுடியாது. வீரர்களே தயாராகுங்கள். சீக்கிரம் புறப்படுவோம்: (திரை விழுதல்).

காட்சி 4.

இடம்: முகலாயரின் பாளையம்.

பாத்திரங்கள்: முகலாயத் தலைவன், பாஜல்கான், ஒற்றர் முதலியோர்.

காலம்: பகல்.

(தலைவன் சிவாஜியின் வருகையை எதிர்நோக்கிக்கொண்டு அங்கும் இங்கும் உலாவிக்கொண்டிருத்தல்) **தனக்குள்:** என்ன காலையிலே வருகிறேன் என்று சொன்ன சிவாஜி மன்னனை இன்னும் காணோமே. விஷயத்தை அறிந்துவரச்சென்ற ஒற்றர்களையும் காணோமே. (ஒற்றர் தலைவன் வருதல்) தலைவனுக்கு சலாம் செய்து: பாபுஜீ பனக்கலக் கோட்டை காலி, ஒருவரும் இல்லை. எதிரிகள் விசாலகட்டத்தை நோக்கிச் செல்வதாகத் தெரிகிறது. சீக்கிரம் பின்தொடர்ந்தால் அவர்களைப் பிடித்து விடலாம்.

தலைவன்: ஆ: மோசம் போனோம். துரோகி, நம்மை ஏமாற்றி விட்டான். வஞ்சகன் இதோ சென்று அவனைப் பழி வாங்குகிறேன். வீரர்களே! ஜல்தி, புறப்படுங்கள், அவனைப் பிடிக்கவேண்டும். சீக்கிரம். (பாஜல்கான் வரல்).

பாஜல்கான்: (கோபாவேசத்தோடு) "தலைவ நான் இதுவரையில் தங்கள் உத்திரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். என் தந்தை அப்சல்கானைக் கொன்ற சிவாஜியைப் பழிக்குப்பழி வாங்காவிடில் நான் ஒரு மைந்தனா? என்னுடன் பணி வீரர் சிலரை அனுப்புங்கள். அவன் தலையைப் பூமியில் உருளும்படி செய்து வருகிறேன்.

தலைவன்: "பாஜல்கான்! உனது தைரியமே உனக்கு வெற்றியைத்தரும். சீக்கிரம் சென்று, அப்பாதகனைக் கொன்று, ஜெயத்துடன் திரும்பிவா. பாஜல்கான் போதல். (திரை விழுதல்)

காட்சி 5.

இடம் : விசாலக்கட்டத்திற்குப் போகும் வழியில் உள்ள ஓர் கணவாய்.

நேரம் : காலை.

பாத்திரங்கள் : சிவாஜி, பாஜி, மராட்டிய வீரர், பாசல் கான், மகம்மதிய வீரர் முதலியோர்.

சிவாஜி : (பாஜியை நோக்கி) நண்ப, இச்சமயம் நீதான் என் உயிரைக் காப்பாற்றவேண்டும். விஜயபுரி வீரர் நம்மை நெருங்கிவிட்டனர். இங்கு சிலர் நின்று அவர்களைத் தடுத்தால் தான், நான் ஆபத்தின்றி விசாலக்கட்டத்திற்குச் சேரமுடியும். இந்தப் பொறுப்பை நீதான் ஏற்றுக்கொள்ளவேண்டும். விசாலக் கட்டம் அடைந்த உடன், சேர்ந்ததின் அறிகுறியாக மும்முறை பீரங்கி சுடப்படும். அது வரையில் நீ எதிரிகளை முன்வர வொட்டாதே. அம்மைபவானி உன்னைக் காப்பாற்றுவாள். போய்வருகிறேன். (செல்லல்)

(பாஜி தனது வீரர்களை கணவாயின்முன் இருபது இருபது வாக நிற்கவைத்தல் மீதியுள்ளோர்களை தனக்குப் பக்கபலமாக பக்கத்தில் நிற்கச் செய்கிறான்.

பாஜி : (வீரத்துடன்) தோழர்காள் புகழுக்கு உடலை விற்கத் துணிவதே வீரர் கடமை. விஜயபுரியின் குதிரை வீரர் கடல்போல் பொங்கிவிடுகின்றனர் கலக்கம் வேண்டாம். பெரு மலையைச் சிற்றுளி தகர்த்துவிடும் அன்றோ? பகைவரைப் புறங் காணின் வெற்றிமாலை. அவர் கையால் வெட்டுண்டு வீரத்தின் வீர சுவர்க்கம். இரண்டில் ஒன்று நிச்சயம். இருபது வீரச் சுவரையும் பகைவர் பிளக்குமுன் நம் சத்துபதிசேர்ந்ததும் பீரங் கிச் சப்தம் கேட்கும். அதுவரையில் நாம் வீரம் விளைத்தல் வேண்டும். உயிர் பெரிதன்று மானம் பெரிது. படைஞர்களே, பகைவர் நெருங்கிவிட்டனர். உடம்பில் ஒருதுளி இரத்தம் இருக்கும் வரையில் உடைவாள் உறுத்து நிற்கவேண்டும். (விஜயபுரி வீரர் நெருங்கிவிடல். இருதிறத்தாருக்கும் பலத்த போர். விஜயபுரி வீரரில் அனேகர் மாண்டனர். இச்சமயத்தில் விஜயபுரியின் காலாட்படை வருகிறது.

பாஜி : (தூரத்தில்வரும் காலாட்படையைக்கண்டு ஆக்ரோசத்துடன்) அரண்போல் நிற்கும் அன்பர்காள் அம்மை பவானியின் அருள். வந்த குதிரைவீரர் வேசாரிப்போயினர். முதல்

சண்டையில் வெற்றிக்கொண்டோம். கையில் வாளும் உள்ளத்தில் உரமும் இருக்கும்வரை எத்தனை சேனைவரின் என்ன? நண்பர்களே கலங்கவேண்டாம். உங்கள் உயிர் உள்ளவரையில் பின்னடையாதீர்கள் தாய்நாட்டைக் காப்போம்.

(விஜயபுரியின் காலாட்படைக்கும், பாஜியின் வீரர்களுக்கும் சண்டை பலமாக நடக்கிறது. அநேகர் உயிர் துறந்தனர் திடீரென ஒரு முகலாகிய வீரனின் வாள் பாஜியின் மார்பில் பாய்ந்து ஊடுருவிச் செல்கிறது—கீழே விழுதல்—அச்சமயம் மூன்று முறை பீரங்கிச்சப்தம் கேட்கிறது. சத்தத்தைக் கேட்டதும் பாஜியின் முகம் மலர்கிறது) **பாஜீ:** கடனைமுடித்தேன் காவலனைக்காத்தேன். தாய்நாட்டைக் காப்பாற்றினேன். தோழன் வாழ்க (உயிர் நீங்குகிறது)

காட்சி 6

இடம்: விசாலக் கட்டடம் என்னும் கோட்டையினுள், அரண்மனை மண்டபம்.

காலம்: பிற்பகல்: பாத்திரங்கள். சிவாஜி. மகாராஷ்டிரர் வீரர்

(இறந்த பாஜியை மகாராஷ்டிர வீரர்கள் எடுத்துப்போய் சிவாஜியின் முன்னிலையில் வைக்கின்றனர்)—சிவாஜி, அவ்வுடலின் மீது விழுந்து இறந்த நண்பனைத் தழுவிக்கொள்கிறான்)

சிவாஜீ: பாஜி, எனக்காக உன் உயிரையும் பொருட்படுத்தாமல் போர் செய்தினையே நீயே என் உத்தம நண்பன், நீயே உண்மைத்தியாகி. (எழுந்திருத்தல், தனது உடைவாளை உருவி, அவ்வுடலுக்குச் சலாம்செய்தல்—பிறகு பலத்த சப்தமாய்) வெற்றி விஜயன் பாஜி தேசபக்தனே (திரைவிழல்)

நீலக் கறுப்பு மை (Blue Black Ink) செய்யும் விதம்

(Rugumoney)

மற்ற அயல் நாடுகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் நம் நாட்டில் இறக்குமதியாவதைக் கண்டு சிலர் பெருமூச்செறியலாம். நம் நாட்டில் உள்ள மூலப் பொருட்களால் இன்னின்ன செய்யக்கூடும் என அறிந்திருந்தும் அதனை உண்டாக்காது சோம்பியிருத்தல் அறிவீனமேயன்றி வேறல்ல.

இத்தொழில் நம் நாட்டில் உள்ள வாலிபரின் மனத்தைக் கவர்ந்தால் இதனுல் நன்மை ஏற்படலாம். பாரதியாரின் பாட்டை உற்சாகத்துடன் பாடும் தோழர்களே! சற்றே கூர்ந்து கவனியுங் கள்.

மாசிக்காய் 10 அவுன்ஸ் எடுத்துக்கொள்ளுங்கள். அதனை நறுக்கி (சிறுசிறு துண்டமாக) அவற்றை வறுத்து, இடித்து நன்ருகச் சலித்து எடுத்து பத்திரமாக வைத்துக்கொள்ளுங்கள். பின்பு, அன்னபேரி $4\frac{1}{2}$ அவுன்ஸ் கருவம் பிசின் $2\frac{1}{2}$ அவுன்ஸ் எடுத்து, இடித்து சலித்து வைத்துக்கொண்டு $4\frac{1}{2}$ டிராம் நீலப் பவுடருடன் கலந்து பொட்டணங்களாகக் கட்டி விற்பனைக்கு அனுப்பலாம்.

குறிப்பு :—1. கருவப்பிசின் அதிகம் சேர்த்தால் எழுத்தைச் சீக்கிரம் தின்றுவிடும். குறைவாகச் சேர்ப்பதே நல்லது.

2. காலணு எடையுள்ள பவுடரை 2 அவுன்ஸ் தண்ணீரில் கலக்கலாம்.

பொழுது போக்கு

1. மந்திரவாதியின் கைத்துண்டு

(உ. அமலதாசன், ஆசிரியன், திருக்குடும்பஸ்தாபனம்.)

மாணவர்களே! இன்று நாம் ஓர் காலணு நாணயத்தைக் கைத்துண்டினின்றும் மாயமாய் மறையச் செய்யப்போகிறேம். உங்கள் கண்களையெல்லாம் சற்று நன்ருய்த் துடைத்துக்கொண்டு கவனியுங்கள்.

இதோ! இது ஓர் கைத்துண்டு. இது என்னுடையது. நான் இப்பொழுது ஓர் மந்திரவாதி. ஏனெனில் நான் இப்பொழுது உங்களுக்கு முன்னிலையில் ஓர் மந்திரம் செய்யப்போகிறேன். இத்துண்டின் நிறம் பச்சை. உங்களுக்கெல்லாம் பச்சை நிறம் பிடிக்குமோ இல்லையோ? கவனியுங்கள்.

நான் இப்பொழுது இத்துண்டின் 4 மூலைகளையும் ஒன்ருகச் சேர்த்து வலது கையில் பிடித்துக் கொள்ளுகிறேன் உங்களில் யாராவது ஓர் காலணு நாணயத்தை நான் உண்டுபண்ணியிருக்கும் இப்பையில் போடலாம். சரி, நாணயம் பைக்குள் சென்று விட்டது. சந்தேகமாய் இருக்கிறதா. ‘டங், டங்’ என்ன

சத்தம் கேட்கிறதா. காலணு மேஜையில் முட்டிக்கொள்ளு கிறது. இல்லையா? உங்களிலும் யாராவது வந்து இதைத் தொட்டுப் பார்க்கலாம். காலணு இருக்கிறதோ இல்லையோ? சரி. இப்பொழுது பாருங்கள். நன்றாய்ப் பாருங்கள். நாண யம் எங்கே போகிறதென்று கவனியுங்கள்.

சூ! மந்திரம்! ஏ! காலணு! நீ ஓடி ஒளிந்துகொள். இதோ நான் இக்கைத்துண்டின் இரு முனைகளையும் விட்டு விடுகிறேன். அடே! நாணயத்தைக் காணவில்லையே! எங்கே அது? ஓகோ? மந்திரம்! அது மாயமாய் மறைந்து விட்டது. எங்கே மாய மாய்ச் சென்ற காலணுவே நீ மறுபடியும் இப்படி இத்துண்டிற் குள் வா. மாணவர்களே சந்தேகம் உண்டானால் என் கையை நன்றாய்க் கவனித்துக் கொள்ளுங்கள். ஒன்றுமில்லையே! இதோ நான் இக் கைத்துண்டின் 4 மூலைகளையும் ஒன்றாய்ச் சேர்க் கிறேன். வந்து விட்டாயா? ஆம்! இதோ மாணவர்களே! இதோ வந்து விட்டது இம்மாயக் காலணு. மேஜைமீது தட் டட்டுமா? ‘டங் டங்’ அடே! உண்மையாகவே நீ வந்து விட்டாயா? ஏ! மணி இதைத் தொட்டுப்பார். பின்பு எல்லோ ருடைய சந்தேகத்தையும் நிவர்த்திசெய். ஓகோ திரும்பி விட்டதா? சந்தோஷம். மாணவர்களே! இதோ இப்பொழுது இந்த மாயக் காலணுவை அதோ அந்த தகரத்திற்குள் போகச் சொல்லுகிறேன். நன்றாய்ப் பாருங்கள். திருட்டுக் காலணு எப்படி பிரயாணம் செய்கிறதென்று கவனியுங்கள். கைத் துண்டை நான் தகரக்குவளைக்குச் சமீபத்தில்கூட கொண்டு போகவில்லை. அடே! துஷ்டக் காலணு! தகரக்குவளையில் போய் உட்கார்ந்து கொண்டது. இதோ பாருங்கள் இக்குவளை யில் அதே காலணுவை. இது மகா பொல்லாத காலணு.

மாணவர்களே! எப்படி வேடிக்கை! இதை நீங்கள் செய்ய முடியுமா? ஓ! நன்றாய்ச் செய்யலாமே! எப்படி என்று சொல்லு கிறேன். சற்று காதை வளைத்துக்கொண்டு கவனமாய்க் கேட் டுச் செய்யுங்கள்.

இரு சவுக்கத்துண்டை எடுங்கள். அவை ஒரே அளவாயும், நிறமாயும் இருக்கவேண்டும். ஓரங்களைச் சேர்த்துத் தையுங்கள். ஓர் முனையில் மட்டும் தைக்காமல் இடைவெளி விட்டு விடுங்கள். கைத்துண்டின் தைக்காத முனையின் கீழே இருந்து எதிர் மூலை வரை இரு துண்டுகளையும் சேர்த்துத் தைத்துவிடுங்கள். ஆனல் எதிர்முனைக்குக் கீழே தையல் விழட்டும்.

ஒரு காலணு நாணயத்தைத் தகரக் குவளையில் வைத்து மேஜையில் ஓர் மூலையில் அதை வைத்து விடுங்கள். கைத் துண்டின் 4 மூலைகளையும் சேர்த்து பிள்ளைகள் கொடுக்கும் காலணுவை தைக்காத மூலை வழியாய்ப் போட்டு இரு துண்டுகளுக்கு இடையில் போகும்படிச் செய்யுங்கள். தைக்கப்படாத மூலையையும் எதிர் மூலையையும் பிடித்துக்கொண்டு துண்டை உதறி நாணயம் இல்லையென்று காட்டுங்கள். மறுபடியும் 4 மூலைகளையும் சேர். இப்பொழுது நாணயம் திரும்பி விடுகிறது. தகரக் குவளையில் காலணு செல்லவேண்டிய கட்டம் வந்தவுடன் துண்டில் உள்ளது உன் இடதுகைக்கு வந்துவிடட்டும். பின்பு துண்டில் நாணயம் இருக்காது. எச்சரிக்கை இவ்வேடிக்கையை ஓர் முறைக்குமேலும் செய்யாதே. வணக்கம். மறுமுறை சந்திப்போம்.

நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

13—11—42 வெள்ளிக்கிழமை. தேவமாதா சபை பாதுகாவலராகிய அர்ச். தணிஸ்லாஸ் திருநாள் நடைபெற்றது. இன்று தேவமாதா சபையில் புதிய அங்கத்தினர் பலர் சேர்க்கப்பட்டனர். புதிய தலைவர், காரியதரிசி, ஆலோசனைக்காரர்களும் தெரிந்தெடுக்கப்பட்டனர். மாதா சபையில் சேர்க்கும் திருச்சடங்கு ஆடம்பரமாக நடைபெற்றது. மேற்றிராசனக் கோவில் ஆங்கிலோ இந்தியர்களின் விசாரணைக் குரு சங். திரவியம் சுவாமியார் திருச்சடங்கை நிறைவேற்றினர். அன்று பிற்பகல் 4 மணிக்கு வருடாந்தர வைபவக் கூட்டம் சங். திரவியம் சுவாமிகள் தலைமையின் கீழ் நடைபெற்றது. “தாயின் தயவு பெற்ற தனபாலன்” என்ற சிறு நாடகம் நடப்பிக்கப்பட்டது. பாப்பரசர் வாழ்த்துடன் வைபவம் இனிது முடிந்தது.

18—11—42, 19—11—42 இந்த இரண்டு தினங்களிலும் “கத்தோலிக்க சேவா சங்கத்தின் நோக்கமும் அதன் அவசியமும்” என்பதைப்பற்றி மதுரை சேவா சங்கத்தின் தலைவரான சங். சாமா S.J. சுவாமியவர்கள் ஓர் இனிய சொற்பொழிவு நிகழ்த்தினர். ஆசிரியர் சேவா சங்கத்தின் அப்போஸ்தலர் ஆதல் எங்ஙனமென்றும் நன்கு விளக்கினர். இறுதியாக எமது தலைமை ஆசிரியர் சங். A. லூர்து சுவாமி B. A. L. T. அவர்கள் சேவா சங்கத் தலைவருக்கு நன்றிகூற, கிறிஸ்து ராஜாவுக்கு ஜே! என்னும் கரகோஷத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

பெற்ருேர் சங்கங்கள்

15—10—42-ல். கரூர், திருக்காம்புலியூர் லேபர் பாடசாலையின் பெற்ருேர் சங்கக் கூட்டம். ஷை ரேஞ்சு டெப்யூடி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ T. S. வைத்தியநாதய்யர் B. A. L. T. அவர்களின் தலைமையின் கீழ் வெகு விமரிசையுடன் நடைபெற்றது. மாணவர்களைக் கொண்டு ஆடல் பாடல்கள் நடத்தப்பட்டன. பெற்ருேர்களின் ஒத்துழைப்பின் அவசியத்தைப்பற்றி தலைவரவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினர். வந்தனோபசாரங்களோடு கூட்டம் இனிது கலைந்தது.

பால்தேவ தாஸ் H. M.

23—10—42-ல். முசிரி தாலூகா ஸ்ரீனிவாஸநல்லூர் ஆரம்பப் பாடசாலை பெற்ருேர் சங்கக் கூட்டம். ஷை ரேஞ்சு ஸீனியர் டெப்யூடி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ T. வீராஸாமி M. A. L. T. அவர்களது தலைமையின் கீழ் நடைபெறலாயிற்று. தலைவர் அவர்கள் பெண் கல்வியின் அவசியத்தை வற்புறுத்தி இனிய சொற்பொழிவு நிகழ்த்தினர். இன்னும் பல ஆசிரியர்கள் பெற்ருேர் சங்கத்தின் ப்ரயோஜனங்களைப்பற்றிப் பேசினர். சிறுவர்கள் பாடல்கள் பாடி மகிழ்வித்தனர். இறுதியில் திரு. V. நடேசன் அவர்கள் அனைவர்க்கும் நன்றிகூறினர். வந்தன உபசாரங்களுடன் கூட்டம் கலைந்தது.

M. Lourdusamy Pillai, H. M. & Secretary.

31—10—42-ல். ஸ்ரீரெங்கம் கொல்லம்பட்டரை எலிமெண்டரி பாடசாலையில் டாக்டர் ஸ்ரீ S. R. வரதராஜுலு நாயுடு அவர்களது தலைமையில் ஷை பாடசாலை பெற்ருேர் சங்க விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. அவ்வமயம் ஸ்ரீ K. நாராயணன் M. A. L. T. அவர்கள் பெற்ருேரின் கடமைகளைப்பற்றிப் பேசினர்.

R. Bashyam H. M. & Secretary.

7—11—42-ல். முசிரி தாலூகா "எயிடெட் ஆரம்பாசிரியர் யூனியன்" கூட்டம், ஷை சங்கத்தின் தலைவர் ஸ்ரீ T. S. இராஜகோபால அய்யர் அவர்களது அக்கிராஸனத்தின் கீழ் துறையூர் ஜெமீன்தார் உயர்தர ஆரம்பப் பாடசாலையில் கூடிற்று. ஆரம்ப ஆசிரியர்களின் பற்பல குறைகளைத் தீர்க்க, அரசாங்கத்தாருக்கு விண்ணப்பித்த பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

A. Alavandar for Secretary.

விகடப் போட்டி

(கொத்து 33, மலர் 4, பக்கம் 74.)

1. உபாத்தியாயர் :—அடே ஜோ, "ஈவதை விலக்கேல்" என்பதற்குப் பொருள் கூறடா.

ஜோ :—ஈ=ஈக்களை ; வதை=கொல்லுவதை ; விலக்கேல்=கைவிட்டுவிடாதே.

I. Anthony, Agraharam, Karaipatti P.O., Salem Dt.

2. பையன் :—அப்பா! என் சிநேகிதன் சுந்தரத்துடன் விளையாண்டுவிட்டு வரட்டுமா?

தகப்பன் :—கூடாது. அவன் எனக்குப் பிடிக்கவில்லை.

பையன் :—அப்பா! அப்படியானால் அவனுடன் சண்டைபோட்டு வருகிறேன்.

M. Swamikkannu, Sigurani, Kaliarkoil P.O., Ramnad Dt.

3. ஆசிரியர் :—பெரியவரே! இன்றைக்கு அறை வருஷப் பரீக்ஷை நடக்கப்போகிறது; பையனைப் பாடசாலைக்கு அநுப்புங்கள்.

பெரியவர் —வாத்தியாரய்யா! இன்னிக்கு முக்கியமான நடவுண்ணு காலையிலே தானுங்க ஒரு நாத்துப்பரியாளும் உழவாளும் கூப்பிட்டிருந்தேன். அந்த இரண்டாளும் பட்டாளத்துக்கு ஓடிவிட்டானுங்களாம். உழவாளுக்குப் பதிலாக பையனையும், நாத்துப் பரியாளுக்குப் பதிலாக உங்களையுந்தான் நம்பியிருக்கிறேன். மோசம் செய்திடாதீங்க. கைமேலே கூலி.*

M. Sandanam, Chellam H. E. School, Orathur, Tirukattupalli P.O.*

4. தகப்பன் :—பாலு, ஸ்டாம்பு வாங்கி கவரில் ஒட்டிப்போடும்படி பணம் கொடுத்தேனே, என்ன சங்கதி.

மகன் :—ஸ்டாம்பு ஒன்றும் வாங்காமலே தபாலாபீஸர் வேறு பக்கமாக திரும்பிக்கொண்டிருந்தபொழுது, அவருக்குத் தெரியாமல் லெட்டரைப் போட்டுவிட்டேனே!

5. உபாத்தியாயர் (பரீக்ஷை முடிந்ததும்) :—என்னடா அமல், கேள்விகளெல்லாம் கஷ்டமா?

அமல் :—இல்லை சார். பதில்தான் கஷ்டம்.

M. Joseph, Holy Redeemer's H. E. School, Trichinopoly.

6. சண்டி மாட்டை சாட்டையால் புடைக்கும் குடியானவனைப் பார்த்து, வழிப்போக்கன் :—ஐயா! பாவம், வாயில்லா ஜீவனை ஏனையா அடிக்கிறீர்?

குடியானவன் :—வாயில்லா ஜீவனோ? வைக்கோல், புல் எல்லாம் நன்றாகத் தின்கிறது ஐயா.

K. M. Chinnasami, Teacher, Krishnapuram.

---

* பரிசு பெற்றவர் : இவர் விலாசத்துக்கு ஒரு வருஷத்திற்கு நமது பூங்கோத்து இனாமாக அனுப்பப்படும்.

கோலாட்டம்

(B. Thomas Victor, Music Teacher, R. C. T. S., Trichy.)

29. கேதாரம்] (' ஆடுவோம் ' என்ற மெட்டு) [ஆதி-தாளம்

பல்லவி

ஸ்ா, நி பாமா பநிபமகமகரி	காஸா காமா	பா ; ; ;
ஆ . . னந்த மா . . . கக்.கோ.	லா . டிடு	வோம் . . .
ஸா கா ரீமா கமகரிஸா நீ	ஸரிஸநிபாமா	காமா பாநீ
ஞா . னம்த ரும். . . குரு	நா . . . தன்பா	தம் . பணிந்
		(தானந்தமாக)

சரணங்கள்

பா ; பாஸா ; நீஸா ;	ஸா கா ஸாகம	கரிஸரிஸா ;
பொங்.குமே . யருள்	தங் . கிடவா.	. . . ழவே.
ஸா ; ரீபா ; ஸாபாபா	ஸாநீபாமா	கா மா பா நீ
இங் . கும்எங் . கும் நிறை	மங் . க ள	னைப் . பணிந்
		(தானந்தமாக)

2. கானமோங்கிட த்யானமாகிட
வானம் பூமி தொழும் தீனன்பாதம் பணிந் (தானந்தமாக)

3. செல்வம் சீருடன் கல்வி ஈந்தருள்
வல்ல மாபரனை நல்லிசையாற் பணிந் (தானந்தமாக)

4. தஞ்சமுன் பாதம் கெஞ்சினோம் நிதம்
நெஞ்சமே தொழுதுன் ரஞ்சிதனைப் பணிந் (தானந்தமாக)

5. சத்ய மார்க்கமும் இத்தரை வாழ
நித்தம் பாக்கியம் பெறவே முத்தமனைப் பணிந் (தானந்தமாக)

182303
600 008

கவனியுங்கள் ! ஆர்டருக்கு முந்துங்கள் !!

எட்டாம் வகுப்புப் பிள்ளைகளுக்கு மும்மணிகளான புத்தகங்கள்

1. சிறுவர் அறிவுக்கதிர் : வருட சந்தா ரூ.1

ஒவ்வொருவர், வீடு, பாடசாலை, சங்கம் வாசகசாலைகளில் மிகமிக அவசியம் இருக்கவேண்டிய மாதப் பத்திரிகை. 1943-ம் வருட E. S. L. C. பரீக்ஷைக்கு (1) தமிழ், (2) கணக்கு, (3) பொதுப்பாடங்களில் ஆராய்ந்தெடுத்த கேள்விகள் மாதந்தோறும் வெளியாகிறது.

2. வினுவிடைப் புத்தகம் : விலை 9 அணு

நம் அறிவுக்கதிரில் மாதந்தோறும் வெளிவரும் கேள்விகளுக்கு அவ்வப் பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களைக்கொண்டு 8-ம் வகுப்புப் பரீட்சைக்குப் பெரிதும் பயன்படும் முறையில் வெளியான விடைப் புத்தகம்.

3. 1943-ம் ஆண்டு எட்டாம் வகுப்புத் தமிழ்ப்பாட விளக்க உரை : விலை 10 அணு

எட்டாம் வகுப்புப் பிள்ளைகள் அறிவுக்கும், தேவைக்குப் தகுந்த முறையில் தமிழ்பாடத்தை, அதே வகுப்பிற்கு 12 வருடம் போதித்த தமிழ்ப்பண்டிதரும், அறிவுக்கதிர் ஆசிரியருமாகிய பண்டிதர் K. J. வேதமுத்தால் எழுதப்பெற்ற சிறந்த உரைப் புத்தகம்.

குறிப்பு:—மூன்று புத்தகங்களுக்கும் முன் பணத்துடன் ஆர்டர் செய்தால் ரூ. 2, (தபாற் கூலி அணு 2 பிரத்தியேகம்.) No. 2, 3 தனித்தனி ஆர்டர் செய்தால் தக்க கமிஷன் தரப்படும்.

விலாசம் :—மானேஜர், சிறுவர் அறிவுக்கதிர் ஆபீஸ்,
ஈரோடு, S. I. R.

OUR EMPLOYMENT BUREAU

WANTED 2 Secondary Grade trained teachers immediately on Rs. **21** per mensem.

A. RAMASWAMY CHETTIAR,
Manager,
Sri Krishna Vilas H. E. School,
Kalangani, Puduchatram P.O.,
Namakkal Taluk, (SALEM Dt

Reg. No. M. 1534.

ரூபாய் 2-0-0 ரொக்கப்பரிசு

ஆசிரியர்களுடைய வாழ்க்கையில் கற்பனைததும்பும் பல சம்பவங்கள் நடைபெறுகின்றன. தினசரி பாடசாலைவேலை நடத்தும்போதும், தவறும் மாணவர்களை கண்டித்துத் திருத்தும்போதும், இன்னும் உபாத்திமைத்தொழிலின் பல அரங்கங்களிலும் சில நீதி புகட்டக்கூடிய சம்பவங்கள் நடைபெறுகின்றன. இச்சம்பவங்களை அநுபவம் பெற்ற ஆசிரியர் ஏனைய ஆசிரியருக்கு நமது பூங்கொத்து வாயிலாய்ச் சொல்வது மிகவும் பயனளிக்கும். ஏறக்குறைய 300-வார்த்தைகளில் எழுதப்படும் ருசிகரமான வரலாறுகள் வரவேற்கப்படும். உண்மைச் சம்பவமாயினும் கற்பனைக்கதையாயினும், பொருத்தமானதும் பயனளிக்கக்கூடியதாயுமிருந்தால் ஏற்றுக்கொள்ளப்படும். தெரிந்தெடுக்கப்பட்டு பிரசுரிக்கும் கட்டுரைக்கு ரொக்கப் பரிசு ரூ. 2-0-0 அளிக்கப்படும். இந்த மாதம் 20-ம் தேதிக்குள் கட்டுரைகள் எமக்குச் சேரவேண்டியது.

பத்திராதிபர்

போதனுவிஷயப் பூங்கொத்து.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supdt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.